இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 63 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 27 – திங்கள்கிழமை 13 அக்டோபர் 2025 – சென்னை 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 63 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 27 - Monday 13 October 2025 - Chennai 28 Pages ₹ 5.00

## ‘நாட்டிலேயே அதிக படிப்பறிவு மிக்க மாநிலமாக தமிழ்நாடு மாற உதவுகிறது’!

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்துக்கு ‘தி வீக்’ பாராட்டு!

### நிறைந்த வயிறுடன் 20 லட்சம் குழந்தைகள் தங்கள் நாளைத் தொடங்குவதாக - முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, அக்.13-

**தமிழ்நாட்டில் காலை உணவுத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதற்கு ‘தி வீக்’ இணைய இதழ் பாராட்டு தெரிவித்து காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளது.**

**இந்த காணொலியை மேற்கோள் காட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.**

காலை உணவுத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது - என்றும், சூரியன் உதயம் ஆவதற்கு முன்பே தமிழ்நாடு முழுவதும் குழந்தைகளுக்கான சமையல் கூடங்கள் தயாராகி விடுகின்றன - என்றும், தினமும் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் நிறைந்த வயிறுடன் தங்களின் நாளைத் தொடங்குகின்றனர் எனவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் பொங்க குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 15.9.2022 அன்று அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முறையாக மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மாணவச் செல்வங்களுக்கு காலை உணவினை பரிமாறி திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.8.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊராகிய திருக்குவளையில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக 15.7.2024 அன்று பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளில், திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம், கீழச்சேரி கிராமத்தில் உள்ள புனித அன்னாள் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது.



தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்கள் நகரப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை சென்னை மயிலாப்பூரில் உள்ள புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் அன்று (26.8.2025) தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

### முதல்வரின் உரை!

அன்றைய தொடக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் முக்கிய பகுதி வருமாறு:-

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மூலம் இனி 37,416 அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 20 இலட்சத்து 59 ஆயிரம் மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவர்.

2022ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் நாள், பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில், மதுரை மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தேன்.

முதல்கட்டமாக, ஆயிரத்து 545 பள்ளிகளில், ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 95 மாணவர்கள் இந்தத் திட்டத்தால் பயனடைந்தார்கள்.

பிறகு, 25.08.2023 அன்று, முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த திருக்குவளையில், அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் இதை விரிவாக்கம் செய்தோம்.


2024-ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாளில், ஊரகப் பகுதிகளில் இருக்கக்கூடிய அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் இந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இதுவரை, 17 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெற்று வந்தார்கள். இந்தத் திட்டத்தின் அட்டகாசமான சக்சஸ் மற்றும் இது கொடுக்கக்கூடிய அபாரமான ரிசல்ட்டைப் பார்த்து, இனி, நகர்ப்புற பகுதிகளில் செயல்படுகின்ற 2 ஆயிரத்து 429 அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்கிறோம். இதனால், கூடுதலாக 3 இலட்சத்து 6 ஆயிரம் குழந்தைகள் பயன்பெற இருக்கிறார்கள். கிராண்ட் டோட்டலாக சொல்லவேண்டும் என்றால், இனி தமிழ்நாட்டில் செயல்படுகின்ற 37 ஆயிரத்து 416 அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளில் படிக்கின்ற 20 இலட்சத்து 59 ஆயிரம் மாணவர்கள் தினந்தோறும் காலையில் சூடாக, சுவையாக, சத்தான சாப்பிட்டு, கிளாஸ் ரூமுக்குள்ளே தெம்பாக நுழைவார்கள்.

ஆண்டொன்றுக்கு 600 கோடி ரூபாய் மதிப்பில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆனால், இதை செலவு என்று நான் சொல்ல மாட்டேன். இது ஒரு சூப்பரான சோஷியல் இன்வெஸ்ட்மென்ட்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியிருந்தார்.

### ‘தி வீக்’ – காணொலி!

இந்நிலையில் முதலமைச்சரின் இந்த காலை உணவுத் திட்டம் குறித்து ‘தி வீக்’ வீடியோவில் சிறப்பாக விமர்சித்து காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளது.




அதில் திருவான்மியூரில் காலை உணவு தயாரிக்கும் இடத்தை படமாக்கி அங்கு அதிகாலை முதல் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது.

தொடக்கத்தில் 1,500 பள்ளிகளில் செயல்பட்ட இத்திட்டம் தற்போது 35,000 பள்ளிகள் வரை விரிவடைந்துள்ளதை அதில் குறிப்பிட்டுள்ளது.

காலையில் மாணவ-மாணவியர்களுக்கு சிற்றுண்டி வழங்குவதில் உடல்நிலையில் வளர்ச்சி, கல்வியில் கவனம், பள்ளிக்கு தொடர்ந்து வருகை, தோழமை உணர்வு அதிகரிப்பு உள்ளிட்டவைகள் அவர்களிடம் நிலவுவதாக ‘தி வீக்’ சுட்டிக்காட்டியது.

THE WEEK

இத்திட்டத்தால் மாணவர்களின் பொதுவான திறன் வளர்ச்சி ஏற்பட்டு வருவதை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது என்று மாநில திட்டக்குழுத் துணைத் தலைவர் ஜெயரஞ்சன் பேட்டியும் அதில் வெளியிடப்பட்டுள்ளது.

கல்வியில் மிக நீண்ட பாரம்பரியத்தை கொண்டுள்ள தமிழ்நாட்டில் 1957-ல் பெருந் தலைவர் காமராஜர் அவர்களால் தொடங்கப்பட்ட காலை உணவுத் திட்டம் பல்வேறு மாற்றங்களுடன் 2025-லும் தொடர்ந்து வருவதை அது சுட்டிக்காட்டியுள்ளது. அது மட்டுமின்றி இந்தியாவில் படிப்பறிவு அதிகரித்து வரும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் பெருமளவு உதவுவதாகவும் ‘தி வீக்’ குறிப்பிட்டுள்ளது.

### வலைதளப் பதிவு!

இந்நிலையில் இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

**காலை உணவுத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.**

**சூரியன் உதயம் ஆவதற்கு முன்பே தமிழ்நாடு முழுவதும் குழந்தைகளுக்கான சமையல் கூடங்கள் தயாராகி விடுகின்றன.**

**தினமும் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் நிறைந்த வயிறுடன் தங்களின் நாளைத் தொடங்குகின்றனர்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் பொங்க குறிப்பிட்டுள்ளார்.

---

### மாநில அளவில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டிற்கான

# ‘முதலமைச்சர் கோப்பை’ இ-ஸ்போர்ட்ஸ் விளையாட்டுப் போட்டி!

## வெற்றி பெற்றவர்களுக்கு – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சான்றிதழ்கள் – பரிசுகள் வழங்கினார்!

*சென்னை,அக்.13-*

***துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.10.2025) ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் மாநில அளவில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை இ-ஸ்போர்ட்ஸ் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து, மொத்தம் 9,75,000 க்கான பரிசுத் தொகை காசோலை, சான்றிதழ் மற்றும் வீரன் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டினார்.***

*தமிழ்நாட்டின் ஒலிம்பிக்ஸ் என அழைக்கப்படும் முதலமைச்சர் கோப்பை 2025-ஆம் ஆண்டிற்கான போட்டியையொட்டி மாவட்ட அளவிலான போட்டிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 25.8.2025 அன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.*

*முதலைமைச்சர் கோப்பை 2025 போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகைக்காக மட்டும் 37.00 கோடி ரூபாய் உள்பட மொத்தம் 83.37 கோடி ரூபாயை முதலமைச்சர் கோப்பை 2025 விளையாட்டு*



*போட்டிகளுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்.*

*முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டியில் மாவட்ட அளவிலான போட்டிகளில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர், பொதுப் பிரிவினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசுப் பணியாளர்கள் என 5 பிரிவுகளில் 16,28,338 பேர் இணையதளத்தின் மூலம் முன்பதிவு செய்து, 37 வகையான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றனர். மாவட்ட மற்றும் மண்டல அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 30,136 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கடந்த 2.10.2025 முதல் தொடங்கி 14.10.2025 வரை சென்னை, கோயம்பத்தூர், திருச்சி, மதுரை மற்றும் செங்கல்பட்டு ஆகிய 13 நகரங்களில் நடைபெற்று வரும் போட்டிகளில் பங்கேற்று வருகின்றனர்.*

*கடந்த ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு அரசு, முதலமைச்சர் கோப்பை 2024 விளையாட்டு போட்டிகளில் இ-ஸ்போர்ட்ஸ் விளையாட்டை காட்சிப் பிரிவாக (Demonstration Sport) அறிமுகப்படுத்தியது. இந்நிகழ்வு மிகுந்த வெற்றியைப் பெற்று, மாநில மற்றும் தேசிய அளவிலான அச்சு மற்றும் சமூக ஊடகங்களில் பெரும் வரவேற்பைப் பெற்றது. இத்தகைய வெற்றியை அங்கீகரிக்கும் வகையில் GEM Awards, தமிழ்நாடு ‘Best State Contribution to e-Sports’ என்ற விருதினைப் பெற்றது.*

*இந்நிலையில் ஆசிய ஒலிம்பிக் கவுன்சில் (Olympic Council of Asia), வரவிருக்கும் 2026-ல் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், மொத்தம் 11 இ-ஸ்போர்ட்ஸ் பிரிவுகள் இடம்பெறுவதை உறுதி செய்துள்ளது. மேலும், சர்வதேச ஒலிம்பிக் குழு (International Olympic Committee - IOC) முதலாவது ஒலிம்பிக் இ-ஸ்போர்ட்ஸ் விளையாட்டுகளை 2027ஆம் ஆண்டு சவுதி அரேபியாவின் ரியாத்தில் நடத்த தீர்மானித்துள்ளது.*

*2025 ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கோப்பை இ-ஸ்போர்ட்ஸ் விளையாட்டுப் பிரிவில் ஆன்லைன் தகுதித் சுற்றுக்காக ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பதிவு செய்தனர். அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 250-க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்க வளாகத்தில் நடைபெற்ற 6 விளையாட்டுகளில் இறுதிச் சுற்றில் பங்கேற்றனர். மாநில அளவில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை - 2025 இ-ஸ்போர்ட்ஸ் விளையாட்டு போட்டிகளில் 3 விளையாட்டு பிரிவுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு இன்று (12.10.2025) தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதக்கம் அணிவித்து, மொத்தம் 9,75,000 க்கான பரிசுத் தொகை காசோலைகள், சான்றிதழ் மற்றும் வீரன் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டினார்.*

*முன்னதாக சென்னை நேரு விளையாட்டு அரங்கில் தமிழ்நாட்டில் முதல்முறையாக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பயிற்சி மேற்கொள்ளும் வகையில் 14.72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அதிநவீன தானியங்கி கூடைப்பந்து பயிற்சி இயந்திரம் மற்றும் 14.75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன தானியங்கி வாலிபால் பயிற்சி இயந்திரங்களை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மாவட்ட வருவாய் அலுவலர் வே. மணிகண்டன், பொதுமேலாளர் திருமதி. எல். சுஜாதா, ஸ்கை இ-ஸ்போர்ட்ஸ் மற்றும் தமிழ்நாடு இ-ஸ்போர்ட்ஸ் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*